செய்தி வெளியீடு எண்: 039 நாள் : 19.01.2014

<u>செய்தி வெளியீடு</u>

பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான மேம்பாட்டிற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு முக்கியமானதாகும். இந்நிறுவனங்கள் அதிக அளவு வேலை வாய்ப்பினை ஏற்படுத்துகின்றன. குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சிக்காக பல்வேறு சலுகைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு அளித்து வருகிறது.

மின்பற்றாக்குறையால் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்படாமல் தொடர்ந்து உற்பத்தியை பெருக்குவதற்காக அந்நிறுவனங்கள் நிறுவும் மின்னாக்கிகளுக்கு அதிக அளவு மானியம் வழங்கும் வகையில் 320 KVA திறன் வரை கொண்ட மின்னாக்கிகளை நிறுவவும், மானிய உச்சவரம்பினை 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளார்கள்.

படித்த இளைஞர்களை, முதல் தலைமுறை தொழில் முனைவோராக மாற்ற உதவும் நோக்குடன் புதிய தொழில் முனைவோர் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கனவே உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி, படித்த இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு, தொழில் தொடங்க திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, நிதிநிறுவனங்களில் நிதியுதவி பெற உதவுவதுடன், பெருந்தொழில் நிறுவனங்களுடன் அவர்களுக்கு வணிகத் தொடர்பும் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வங்கிகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றின் வாயிலாக 25 லட்சம் ரூபாய்க்கு மிகாமல் 25 விழுக்காடு முதலீட்டு மானியமும், மூன்று விழுக்காடு வட்டி குறைப்புடன் கூடிய கடனும் பெற உதவி செய்யப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவித்து, தமிழகத்தில் ஒரு தொழில் புரட்சியை உருவாக்கவும், தமிழ்நாடு அரசின் "தொலை நோக்குப் பார்வை 2023"-ல் குறிப்பிட்டுள்ளபடி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார வளர்ச்சிக்கேற்ப தங்களை தயார்படுத்திக் கொள்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

மேலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை தொடங்குவதற்கு ஏற்ற உட்கட்டமைப்புகளுடன் கூடிய தொழிற்பேட்டைகள் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் எடுத்து வருகிறது. இந்நிறுவனம் புதிய தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திடவும், நடைமுறையிலுள்ள தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திடவும் மற்றும் மேம்படுத்திடவும், மைய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டம் மற்றும் அதன் அங்கமான

ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இதன்படி, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் அங்கமான, ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டியில் உள்ள தொழிற்பேட்டையில் சாலைகளை சமன்படுத்தி தார் சாலை அமைத்தல், சாலை ஒரங்களில் மரங்கள் நடுதல், தெரு விளக்கு அமைத்தல், குடிநீர் வழங்க குழாய்கள் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 19.1.2014.